From-39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

C.C.No. 40 /2018

Deposition of witness for: PW - 8

| | | | |
|---|---|---|---|
| Name | : Sundaram | Father/Husband Name | : Periyasamy |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 18.12.2020 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2020.

முதல் விசாரணை:

நான் தொந்திலிங்கபுரத்தில் வசிக்கிறேன். விவசாய வேலை செய்கிறேன். அ.சா.1-ஐ தெரியும். எதிரிகளை தெரியும். சுமார் 8 வருடங்களுக்கு முன்பாக அ.சா.1-க்கும் எதிரிக்கும் வெள்ளிமலை முருகன் கோவிலில் வைத்து திருமணம் நடந்தது. திருமணத்தின்போது அ.சா.1-ன் பெற்றோர் 12 பவுன் நகை சீர்வரிசை பொருட்களும் கொடுத்தார்கள். அவர்கள் ஒரு பெண் குழந்தை உள்ளது. அ.சா.1 கருவுற்றிருந்தபோது 1-வது எதிரி கருவை கலைக்க சொன்னார். அதனால் பிரச்சினையை ஆகி அ.சா.1 அவரது அம்மா வீட்டிற்கு வந்துவிட்டார். பின்னர் அவர்களை பேசி சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தோம். பின்னர் எதிரியின் வீட்டில் பூசுவதற்காக அ.சா.1-ன் தாத்தாவிடம் இருந்து அ.சா.1 ஒரு லட்சத்து இருபத்து ஐந்தாயிரம் ரூபாய் ரொக்கமாக வாங்கி 1-வது எதிரியிடம் கொடுத்தார். 1-வது எதிரி ஆள்துளை கிணறு போடுவதற்காக நகையை அடகு வைத்து தருமாறு அ.சா.1-யிடம் கேட்டபோது அவர் மறுத்ததால் பிரச்சினை வந்தது. பிறகு பேசி பார்த்ததில் சமாதானம் ஆகாததால் ' அ.சா.1 காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்.

குறுக்குவிசாரணை

நான் தொந்திலிங்கபுரத்தில் குடும்பத்துடன் வசிக்கிறேன் என்றால சரிதான். அ.சா.1-ம் 1-வது எதிரியும் திருமணத்திற்கு பின்பு மேல்புதுப்பட்டியில் குடியிருந்தார்கள் என்றால் சரிதான். மேல்புதுப்பட்டிக்கும் தொந்திலிங்கப்புரததிற்கும் 3 1/2 கிலோ மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். சம்பவம் எதுவும் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் கேள்விப்பட்டதுதான் என்றாலும் சரிதான். திருமணத்தின்போது சீர்வரிசை

கொடுத்ததை நோட் எழுதினார்களா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. நகை 12 பவுன் என்பது என்ன என்ன நகை என்று தெரியுமா என்றால் தெரியாது. 1-வது எதிரி அ.சா.1-ன் கருவினை அழிக்க சொன்ன விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எதிரியின் வீட்டை பூசுவதற்கு வாங்கிய பணம் ஒரு லட்சத்து இருபதாயிரமா ஒரு லட்சத்து ஐந்தாயிரமா என்றால் ஒரு லட்சத்து இருபத்து ஐந்தாயிரம். பணம் கொடுத்த அன்று நான் இருந்தேனா என்றால் இருந்தேன். பணம் யார் யாரிடம் கொடுத்தார்கள் என்றால் அசா.1-ன் தாத்தா 1-வது எதிரியிடம் கொடுத்தார். பணம் கொடுத்தபோது நான் நேரடியாக இருந்தேனா என்றால் இருந்தேன். அப்பொழுது அவர்களையும் என்னையும் தவிர வேறு யார் இருந்தார்களா என்றால் வேறு யாரும் இல்லை.1-வது எதிரி ஆள்துளை கிணறு போடுவதற்காக அ.சா.1-யிடம் நகை கேட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் நான் செவி வழியாக கேட்டேன். அ.சா.1 நெருங்கிய உறவினர் என்றால் உறவினர் இல்லை ஒரே ஊர்க்காரர். அ.சா.1-ற்கு நான் நெருங்கிய உறவினர் என்று அ.சா.1-யே சொன்னால் அது சரியானது இல்லை என்றால் சரிதான். அசா.1-ன் தாத்தா எனக்கு எவ்வாறு பழக்கம் என்றால் ஒரே ஊர். அ.சா.1-ன் தாத்தா எனக்கு பழக்கம் என்பதால் 1-வது எதிரிக்கு எதிராக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.